வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# அம்பை சிறுகதையில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002.**

மின்னஞ்சல் முகவரி - dhanarajsjc@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் குடும்ப நிலையிலும், சமூகச்சூழ்நிலையிலும் வெற்றி பெறவேண்டுமென்றால் பல தடைகளைக் கடந்து வரவேண்டும். அந்தத் தடைகளாக அம்பை தமது சிறுகதையில் வெளிப்படுத்தும் செய்தியினை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றன.

**கலைச்சொற்கள் -**

உரனடையவன் - The Sterner Sex, பெருமைக்குரியவன் - The Renowned Sex, பெண்மகளுக்குரிய அச்சம், நாணம், மடம் என்ற இயல்புகள் - The Fair sex, இரக்கமுடையவள் - The Gentle Sex, மெல்லியவள் - The Softer Sex, உணர்ச்சியை அடக்கும் ஆற்றல் அற்றவளாக / செயல்திறனற்றவளாக - The Weaker Sex.

**முன்னுரை**

பெண்மைக்கு முதன்மை கொடுக்கும் நாடு என்றும் நிலத்தையும், நீரையும், அறிவையும், பொறுமையையும் பெண் தெய்வமாகப் போற்றும் நாடு நம்நாடு. என்றும், ஆண்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பவள் பெண் என்று பெருமைகொள்ளும் நம் நாட்டில் பெண்களுக்கு எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்படுகின்றன, என்பதை அன்பையின் ‘சிறகுகள் முறியும்’‘வீட்டின் மூலையில் சமையலறை’ என்னும் இவ்விரு படைப்புகளும் பெண்ணிய

இலக்கியமாக இனங்காணப்பட்டு அவற்றின் வாயிலாக அம்பை படைத்துக்காட்டிய பெண்ணிய வெளிப்பாடுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பெண்கள் வளர்ச்சிக்கான தடைகள் பற்றியச் சிந்தனைகள்**

சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி இன்றைய நடைமுறை வாழ்விலும், குடும்ப அளவிலும், சமுதாய நிலையிலும்மாகப் பெண்கள் சந்தித்து வருகின்ற சிக்கல்களைப் பெண்களின் வளர்ச்சிக்கான தடைகள் எனலாம். இன்றைய வாழ்க்கைச் சூழலில் பெண்கள் எதையும், எவரையும் ஆராய்ந்து பார்த்தே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற முறையினை குறித்து,

"காதலித்து 'டேக்கட்ஈஸி' சொல்லும் இச்சர்கள்

நியாயம் கேட்டுக் காவல்துறை போனால்

கற்பை சூறையாடும் காக்கிச்சட்டைகள்

மனச்சாந்தி பெற ஆசிரமம் போனால்

ஆசிர்வதிப்பாய் அசிங்கப்படுத்தும்

காவிக் காவாலிகள்" [1]

என்ற **'கவனம் சகோதரி'** கவிதை தெளிவுபடுத்துகின்றது. மரஞ்செடி, புழுக்கள் முதல் மனிதன் வரையிலுள்ள எல்லா உயிர்களும் வாழ்க்கையின் பொருட்டு இவ்வுலகில் இடைவிடாமல் போராடிக் கொண்டிருக்கின்றன. இதைப்போலவே பெண்களும் இல் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி தோல்விகளைச் சந்தித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். சமூகத்தில் "ஆடவர் பெண்களுக்குக் கல்வியளிக்க மறுத்ததற்கான காரணம் அவர்கள் அறிவின் மேன்மையால் தமக்கு என்றும் கீழ்ப்படிந்து இருக்கமாட்டார்கள் என்ற சுயநலமேயாகும்"[2] கல்வி குறித்த இக்கருத்து இந்தியாவில் நிலைபெற்றுள்ளது. அம்பை படைத்துக்காட்டிய பெண்களில் அநேகர் கல்வி அறிவு இல்லாதவர்களாக பல்வேறு தடைகளில் சிக்குண்டு உழல்கின்றனர். அவையாவன,

1. வரதட்சணை, வறுமைப் பற்றியச் சிந்தனைகள்.
2. பெண்களின் மறுவாழ்வுக்கு எதிர்ப்பு பற்றியச் சிந்தனைகள்.
3. பாலியல் அடிமைத்தனம் பற்றியச் சிந்தனைகள்.

4. அடிமை வாழ்வும் பாலில் வன்முறைகளும் பற்றியச் சிந்தனைகள்.
5. உடன் கட்டை ஏற்றுதல் பற்றியச் சிந்தனைகள்
6. நிறப்பாகுபாடு பற்றியச் சிந்தனைகள்
7. சமையலறைக்குள்ளேயே முடங்கிவிடும் நிலைகள் பற்றியச் சிந்தனைகள்
8. விளம்பரங்களில் காட்டப்படும் பெண்களின் நிலைகள் - இவற்றில் சிலவற்றின் விளக்கங்களைக் காண்போம்.

**வரதட்சணை, வறுமை பற்றியச் சிந்தனைகள்**

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பெண்ணியத்திற்கான தடைகளாகக் கருதலாம். வறுமையின் காரணமாகவும் வாழ்க்கைத் துணையாக அமையும் ஆண்மகனுக்காகவும் தட்சணை கொடுக்க இயலாமலும் எத்தனையோ பெண்களின் வாழ்வு இருளடைகின்றது. “வறுமை காரணமாக தங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க இயலாத பெற்றோர்கள் அவர்களைக் கோயிலுக்கு அர்ப்பணித்தமையைக் காணலாம். கிறிஸ்தவ மதம் இன்றும் அர்ப்பணிக்கப்பட்ட பெண்களுக்கு (கன்னிகாஸ்திரீகள்) உணவு, உடை, உறையுள், கல்வி ஆகியவற்றைக் கொடுத்து ஓம்பி வருவது குறிப்பிடத்தக்கது”[3] இன்றைய காலக்கட்டத்தில் ஆண்களுக்குத் தட்சணை தர இயலாத பெற்றோர்கள் தமது பெண்ணை மனநிலை சரியில்லாத ஆடவர்க்குத் திருமணம் செய்து வைக்கும் கொடுமையினை அம்பையின் **‘அறைக்குள்ளிருந்தவன்’** என்ற சிறுகதை சித்திரிக்கின்றது. அதனை பின்வரும் உரையாடல் தெளிவுப்படுத்துகின்றது.

‘ஹ! வறுமை எப்படிப்பட்ட ஒன்று. பசி வயிறு புதையுண்டு போக, நாவின் சுவைக்காம்புகள் மண்ணைக் கண்டாலும் ஊறலெடுக்க, பிச்சைக்காரன் குவளையிலிருக்கும் கதம்பச் சோறு கூட வயிற்றில் விழக்கூடிய சுவையுள்ளதாகத் தோன்றும் பசியை அவளுக்குத் தெரியும்.

……………………

அப்படி ஒருமுறை வந்தபோது தான் அந்த வீட்டு யஜமானி கேட்டாள்.

சமையலறைக்கே வந்து இடுப்பில் கை வைத்தபடி,“என்ன ரங்கம்மா, இவளுக்கு என்ன வயது” என்றாள்.

பத்தொன்பது மாமி. நடுநடுவே பணம் இல்லாம படிப்பு விட்டுப் போயிடுத்து.
……………………

“என்ன படிப்பு வேண்டியிருக்கு? சமர்த்தா லட்சணமா இருக்கா. ஏன் பிள்ளைக்குத் தரயா?

மூன்று பிள்ளைகள் அந்த வீட்டில். மூத்தவனை அவள் பார்த்ததே கிடையாது. அவன் கத்தலை மட்டும் கேட்டதுண்டு….

நடுங்கும் குரல் ‘எந்தப் பிள்ளையைச் சொல்லறேள்?’’ என்றாள் அம்மா.

“மூத்தவனைத்தான். அவனைக் கவனிச்சுக்கவும் ஒரு ஆள் வேணுமோ இல்லையோ? என் மனம் என்னிக்குமே எளகிய மனசு. என்னாலே விடிவு வரட்டுமே? வேற பெண்ணு கிடைக்காதா என்ன? கிடைக்கும் ஒரு ஏழைப்பொன்னு நம்மாலே நல்லபடியா வாழட்டுமேன்னு தான் சொல்றேன் என்னசொல்றே’’.

“மாசம் மாசம் உனக்குப் பணம் அனுப்பிடுவேன் நீ இப்படி வேலை பண்ணவேண்டாம்’’ என்றாள்.

மேற்கண்ட உரையாடல் ஏழைத்தாய் - பணக்காரத்தாய் இருவரிடையானது. இக்கதையில் வறுமையின் காரணமாகவும் வரதட்சணை கொடுக்க இயலாத ஏழைத்தாய் தமது மகளை மனநிலைசரியில்லாத ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கு ஒப்புக்கொள்கின்றதாய் அமைந்துள்ளது. இந்நிலை வறுமையின் காரணமாக உள்ள திருமண வயது பெண்கள் சிலர் விலைபேசப்படும் நிலையில் உள்ளதை அம்பை சித்திரித்துக் காட்டியுள்ளார்.

**பெண்களின் மறுவாழ்வுக்குரிய எதிர்ப்பு சிந்தனைகள்**

வீட்டுத்தேவைக்காகத் தன் உழைப்பினைப் பன்முக நோக்கில் வழங்குபவள் பெண். அதற்காக அவள் பல்வேறு பொறுப்புகளைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளும் நிலையை,

“தாயென்றும் வடிவைத் தமக்கையின் வடிவை

மகளெனும் வடிவை மனையின் வடிவை’’[4]

என்ற கவிஞர் கூற்றுப்படி மனைவியாக, தாயாக, மருமகளாக, மாமியாராக இல்லறத்தில் தன்னுடைய உடல் உழைப்பைத் தரும் பெண்களை இன்றளவும் இழிவாகவே கருதப்படுகின்றனர். என்பதை அம்பை குறிப்பிடும்போது, அறியாமையால் சிறுவயதில் தவறிழைத்த பெண்ணுக்கு அதனை விட்டு மீண்டுவர

இச்சமூகம் அனுமதியளிப்பதில்லை பெண்ணின் மறுவாழ்வுக்குத் தடையாக பெண்ணின் நடத்தை மீது களங்கம் சுமத்தப்படுவதை 'பயங்கள்' என்ற சிறுகதையில் இடம்பெறும் அஞ்சலி இவ்வகையைச் சார்ந்தவள். அஞ்சலி தனது குழந்தைப் பருவ பாலில் பாதிப்பால் மன உளைச்சலுக்கு ஆளாகின்றாள் இதனால் தன்னையே குறையுடையவளாக நினைத்துக் கொண்டு திருமணமான சேகருடன் இணைந்து வாழ்கிறாள். சேகரோ தனது சமுதாய மதிப்புக் கருதி அஞ்சலியை விட்டு விலகுகிறான். தனித்து விடப்பட்ட அஞ்சலி தனக்குத் துணையாக மனோகருடன் புதுவாழ்வைத் தொடங்குகிறாள் அவ்வாழ்வுக்குச் சேகரால் இடையூறு ஏற்படுகின்றது. மேலும் அவளின் மறுவாழ்வு விமர்சிக்கப்படுகிறது. இதனை,

அஞ்சலி : என்னைப் பத்தியா? நான் இப்போ மிஸஸ் மனோகர் அவ்வளவு தான் விசயம்.

சேகர் : உன் ஹஸ்பெண்ட் பத்தி எனக்குத் தெரியாதுன்னு நினைக்கிறையா?

சேகர் : He is impotent (புன்னகைக்கிறான் அவளைப் பார்த்தவாறே)

அஞ்சலி : சேகர், நீ எதுக்கு வந்தேங்கறதைச் சொல்லு மத்தபடி எதுவும் பேச உனக்கு அதிகாரம் கிடையாது.

அஞ்சலியின் மறுவாழ்வில் அவளின் முன்னாள் காதலன் இடையூறு செய்வது புலனாகின்றது. ஆண் தன்மை இழந்த மனோகருடன் புது வாழ்வை தொடங்கும் அஞ்சலி சமுதாய ஏளனத்துக்கு ஆளாகின்றாள். "பெண்களின் அழகினையும், பொருளினையும் ஏதிர்ப்பாக்கின்ற சமூகம், அவளின் அறிவுத்திறமையையும், துணிச்சலையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றது"[5] என்ற கூற்று மேற்கண்ட உரையாடல் மூலம் நிரூபனம் ஆகின்றது. பெண்கள் தங்கள் கொள்கையில் உறுதியுடன் மறுவாழ்வு மேற்கொள்ளும்போது, அதற்கு ஆண்கள் தடையாக இருப்பது இதன்வாயலாகத் தெளிவாகின்றது.

**பாலியல் அடிமைத்தனம் பற்றியச் சிந்தனைகள்**

உலகம் முழுவதும் 'பால்வகை' என்பது ஆண்கள், பெண்களை அதிகாரம் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது. ஆண் தனக்குரிய சமூகக்களனாக இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றைத் தெரிந்தெடுத்துக் கொண்டு இத்துறைகளில் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்கிறான். பெண்ணுக்கு 'இல்லம்' என்பதை உரியதாக்கி அதற்குள் அவளைக்

கட்டுப்படுத்துகின்றான் என்பதே பாலியல் அடிமைத்தனமாக இனங்காணப்படுகின்றது. ‘ஹெட்லிக்டான்’ மற்றும் ‘ஆன்சல்ரைன்’ உள்ளிட்ட பெண்ணியவாதிகள் ‘பாலியல் அடிமைத்தனம்’ என்பது பற்றி விரிவாகப் பேசுகின்றனர். இச்சமுதாயம் பெண்களைப் பெண்ணாகமாறு, பெண்ணாகஇரு, பெண்ணாகவாழ் என்று சொல்லிச் சொல்லி அவர்களை அடிமைவாழ்விற்கு உட்படுத்திவிட்டது”[6] என்பதே இவர்களின் வாதம் இவ்வாறான ஆளுமைக் கருத்தியல்கள் பெண்ணுக்கெதிராக தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்தில் காணலாகும் கருத்துக்களாக,

“பெருமையும் உரனும் ஆடுஉ மேன”[7] எனவும்

பெண்டிரின் இயல்பை குறித்து,

“அச்சமும் நாணும் மடனும் முந்துறல்

நிச்சமும் பெண்பாற்குரிய”[8] எனவும்

வரையறை செய்துள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். இதனடைப்படையில் “ஆண்மகன் உரனடையவனாக (The Strerner Sex) பெருமைக்குரியவனாக (The Renowned Sex)உருவாக்கப்படுகிறான். பெண்மகள் அச்சம், நாணம், மடம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக(The Fair sex) இரக்கமுடையவளாக (The Ggentle Sex) மெல்லியவளாக (The Softer Sex) உணர்ச்சியை அடக்கும் ஆற்றல் அற்றவளாக.∴. செயல்திறனற்றவளாக (The Weaker Sex) உருவாக்கப்படுகிறாள்”[9] இத்தகைய பாலியல் விதிமுறைகள் தான் சிக்கலுக்குக் காரணங்களாகின்றன. அம்பையின் ‘ஆள்காட்டிவிரல்’, ‘ம்ருத்யு’, ‘ஸஞ்சாரி’, வல்லூறுகள், ‘வெளிப்பாடு’, ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ என்ற சிறுகதைகள் பெண்களின் மீது ஆண் புகுத்தும் பாலியல் அடிமைத்தனத்தை வெளிப்படுத்துகின்றன. **‘ஸஞ்சாரி’** கதையில் வரும் ருக்மினி ரங்காவால் பாலில் அடிமைத்தனத்திற்கு எவ்வாறு ஆளாகின்றாள். என்பதை அம்பை பின்வருமாறு சான்றுகாட்டுகின்றார்.

ருக்மா, நீ அடிக்கடி குமாரோட பேசறதும், பழகறதும் எனக்கப் பிடிக்கலே.

கட்டாயம் உன் அப்பாவுக்கு அவர் மனைவி வேற ஆம்பளையைப் பார்த்திருந்தால் பிடித்திருக்காது. ஆவர் அப்பாவுக்கும் அப்படியே அவர் அப்பாவின் அப்பாவுக்கும்…

……………….

"அவள் … செய்யக்கூடியவை.

சமையல்:

அன்புசெலுத்துதல்:

அம்மாவாதல்:

அவனையே காதலித்தல்:

அவனையே அடுத்த பிறப்பிலும் அடைய வேண்டிக்கொள்ளல் அப்படி இல்லையென்றால் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளலாமல் … அல்லது

இன்னொருவன்: கிடைத்தால்

அவன் செய்வான் என்று எதிர்ப்பார்ப்பவை:

சம்பாதித்தல்

குலத்தை நசிக்காமல் வளர்த்தல்

அன்புசெலுத்துதல்..

எப்பொதெல்லாம் அவள் உரியவள் என்று

எண்ணுகிறானோ

அப்பொது

அவள் அடங்காப்பிடாரியாகப் போனால் இவன்

சகித்துக்கொள்ளல் - அல்லது மற்றொருத்தி"

**'ஸஞ்சாரி'** கதையில் ரங்காவால் ருக்மினிக்கு விதிக்கப்பட்டுள்ள பாலியல் சட்டங்கள் தான் இன்று பெண்ணுக்கான சமுதாய நடைமுறை விதியாகும். ரங்கா ருக்மனியை தனது ஆளுமையால் ஆளமுற்படுகிறான். ருக்மினியின் உடல் மீதான முழு உரிமையும் தனக்கே உரியது என்ற எண்ணமே ரங்காவின் பாலியல் அடிமைத்தனமாக வெளிப்படுகின்றது. இதுவே காலங்காலமாக ஆண்கள் பெண்கள் மீது திணிக்கும் பாலியல் அடிமைத்தனமாகும்.

**‘ஆள்காட்டிவிரல்’** என்ற கதையில் ராஜன் என்னும் ஆண் கதாபாத்திரம் பெண்ணைப்பற்றி மனதில் நினைப்பது கூட பாலியல் அடிமைத்தனத்தையே பிரதிபலிப்பதாக அம்பை சுட்டிக்காட்டுகின்றார்.

**அடிமை வாழ்வும் பாலியல் வன்முறைச் சிந்தனைகளும்**

“பெண்கள் பொய்யைப் போல பாவமுடையவர்கள், ஆண்களை அசுத்தஞ்செய்வதே பெண்களின் இயல்பு, பெண் எப்பொழுதுமே விடுதலையடைந்திருக்கத் தகுதியற்றவள்”[10] இவை மனுகூறும் சட்டங்கள் ஆகும். இத்தகைய வேதகால கட்டுப்பாடுகளை எதிர்த்து ஆண்களுக்கு இணையான உரிமைகளும் இடமும் கிடைக்க பெண்குரல்கள் பல காலமாக ஒலிக்கப்படுவதுடன் அதற்கான போராட்டங்களில் பலரும் ஈடுப்பட்டும் வருகின்றனர். இருப்பினும் இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. அம்பையின் **‘சூரியன்’** என்னும் சிறுகதையில் இரண்டு நாடுகளுக்கு இடையேயான போரின் விளைவால் மறைந்து வாழும் பெண்களுக்கு ஆண்களால் பாலில் வன்முறைகள் நேருவதும், அதனால் அநேக இறப்புகள் நிகழ்வதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனைக் குறித்து,

“அம்மா அவனைத் துரிதப்படுத்தினாள்.

……………………..

அவள் அக்காவைத் தேடுகிறாள். அக்கா இறவுக்கு முன் முக்கிய காாரியமாகப் போனாள். பின் வரவே இல்லை ……….

அம்மாவின் நடை துரிதமாகியது. ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் அங்கும் இங்கும் நுழைந்தாள். சில நிமிடங்களுக்குப் பிறகு பெரிய புதரொன்றின் அடியே நோக்கியவள் பின் நகராமல், கால் மடங்க அங்கேயே அமர்ந்தாள், அக்கா, அங்கே படுத்துக்கொண்டிருந்தாள். அம்மாவின் அருகே கைகட்டி அவன் நின்றான். அம்மா சுருங்கிய விரல்களை அக்காவின் கேசத்தில் துளைத்தாள். முகத்தின் மீது வருடினாள், நெஞ்சின்மீது தட்டினாள். விலகிய உடைகளை இழுத்து மூடினாள்.

“என் சின்னப் பெண்ணே” என்றவாறு அவளை இழுத்துச் சேர்த்து மார்பில் சாய்த்துக்கொண்டாள்.

மேற்கண்ட கதையானது ஆணின் பாலியல் வக்ரத்திற்குப் பலியான பெண்ணின் நிலையினை விவரிப்பதாய் அமைகின்றது.

**நிறப்பாகுபாட்டால் பெண்களுக்கு ஏற்படும் அவமதிப்புச் சிந்தனைகள்**

பெண்களிடையே கருப்பு, சிவப்பு என்ற நிறவேற்றுமையை நிலைநாட்டும் பண்புகள் காலங்காலமாக நடந்துகொண்டிருக்கின்றது. குடும்பத்திலிருக்கும் அனைத்துப் பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. பெற்றோர்களும் தங்கள் பெண்குழந்தைகள் கருப்பாக இருந்தால் கவலையடைகின்றனர். பெண்குழந்தைகள் நிறத்தினைக் காட்டிப் பேதப்படுத்துவதை **'அம்மா ஒரு கொலை செய்தாள்'** என்னும் சிறுகதையில் அம்பை உளவில் ரீதியான செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார். குழந்தை மனநிலையிலிருந்து பெரியவளான பெண் ஒருத்தி தன் அம்மாவிடம் தன் உடலில் ஏற்பட்ட மாற்றத்தைப் பகிர்ந்துகொள்ள நினைத்து அன்புடன் அணுகுவதும், அவளின் அம்மா வெறுப்புடன் நடந்துகொள்வதால் அந்தப் பெண்ணின் மனநிலையைப் பாதிக்கும் தன்மையினை இக்கதையில் விளக்குகின்றார்.

பெண்குழந்தை பிறந்தாலும் அழகுடன் பிறக்க வேண்டும். பெண்ணின் அழகே அந்தக் குழந்தையின் தகுதியை நிர்ணயம் செய்கிறது. பொதுவாகவே பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அன்று முதல் இன்று வரை அழகை வருணிக்கும் இயல்பைக் காணலாம். ஆண்களுக்குப் பிடிக்காத பெண்களை அழகில்லாதவர்கள் என ஒதுக்கி விடுகின்றனர். இதனால் அழகில்லாதவர்கள் எனக் கருதப்படும் கருப்பான பெண்களைப் பெற்றோர்களே வெறுக்கும் சமுதாய சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்நிகழ்வினை அம்பை,

டாக்ஸியின் கதவைத்திறந்து, கரும் பச்சைப் புடவை கசங்கியிருக்க, அம்மா வீட்டிற்குள் வருகிறாள்.

'என்ன ஆச்சு? என்றார் அப்பா',

"பொண்ணு கருப்பாம் வேண்டாம்னுட்டான் கடங்காரன்"

"நமக்கும் ஒரு கருப்குப் பொண்ணு உண்டு".

……………………………

மொட்டென்று அம்மா முன் போய் நிற்கிறேன் …

என் உடம்பே எனக்கு மாறுதலாய்ப்படும் தவிப்பை – அம்மா விளக்கப் போகிறாள் மெல்ல என்று அவன் முகத்தைப் பார்க்கிறேன். வாழைத்தண்டு போல் நீண்ட கரங்களால் அவள் என்னை அணைக்கப்போகிறாள் …..

அம்மா என்னைப் பார்க்கிறாள்.

"உனக்கு இந்த இழவுக்கு என்னடீ அவசரம்? இது வேறே இனிமே ஒரு பாரம்" சுளீரென்று கேள்வி.

அந்த ஈரமில்லாத சொற்கள் பட்டாக்கத்தியாய் விழுந்து முன்பு முளைவிட்டிருந்ததே அத்தனை அழகுகளையும் குருட்டுத்தனமாக வதம் செய்கின்றன".

மேற்கண்ட உரையாடலில் தாய் - மகள் உறவுநிலையானது நிறப்பாகுப்பாட்டால் விரிசல் அடைவதாகச் சித்திரித்துக்காட்டப்பட்டுள்ளது தெளிவு. பெண்ணைப்பெண்ணே வெறுத்தல், எதிர்த்தல் என்ற வெளிப்படையான தோற்றத்தில் மறைந்திருப்பது கேட்மில்லட் குறிப்பிடுவது போன்று 'பெண் மனோபாவம்' (மானோபாவம் என்பது உளவியல் சார்ந்தது. ஆண் இப்படித்தான் இருப்பான் பெண் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற மனோபாவத்தை உருவாக்கிக்கொண்டு வருகின்ற தலைமுறைகளையும் அதன்படி உருவாக்குவது) என்பது ஆண் ஆளுமைப் பாலியல் அரசியலாகும். நிறத்தில் ஆணுக்குக் கருப்பு அழகியலையும், பெண்ணுக்கு அவலத்தையும் தருவது நடைமுறையாகியுள்ளது. இத்தகைய மனோபாவத்தால் காலங்காலமாக பெண்ணுக்குச் சிவப்பு அழகு என்றும் ஆணுக்குக் கருப்பு அழகு என்றும் பதியமிட்டுள்ளனர்.

**விளம்பரங்களில் காட்டப்படும் பெண்கள் பற்றியச் சிந்தனைகள்**

விளம்பரத்தின் மூலப்பொருளே இன்று பெண்கள் தான் எனலாம். பெண்களை பத்திரிகை வியாபாரமாகவும், திரைப்படத்தின் மூலதனமாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் காலம் இதுவாகும். "தாய், சகோதரி மனைவி என்ற உறவு நிலைகளிலும் அதற்கும் மேலாக இந்தச் சமூகத்தின் சரிநிகர் பாதி என்ற வகையிலும் பெண்களை மதிக்கவும், மேன்மைப்படுத்தவும் சங்கநாதம் ஓங்கி முழங்குகின்ற இந்த நாளில் இப்படியொரு விளம்பரம், ரொம்ப ரொம்ப இயல்பாகச் சொல்லுகிற குரூரம். பேண்ணையே ஒரு பண்டமாற்றாக,நுகர்பொருளாக ஆக்கிக் காட்டும் கயமை"[11] இக்கூற்றின் உண்மை என்பது ஒரு பொருளைப்பற்றிய விளம்பரங்களில் அதனுடைய தரமான தகவல்களைத் தராமல் பெண்களைக் காட்டி விளம்பரப்படுத்தினால் தான் அனைவரையும் கவரமுடியும் என்ற எண்ணப்போக்கை **'புனர்'** என்ற சிறுகதையில் அம்பை வெளிப்படுத்தும் விதம்,

“கதாநாயகி ஓடுகிறாள் குண்டர்கள் துரத்துகிறார்கள் கதாநாயகன் வருகிறான், சண்டை நடக்கிறது, அவன் அவளை அடைகிறான். அவன் ஆண்.

“எங்கள் ஸீட்டிங் துணியை அணியுங்கள் உங்கள் காதலி விரும்புவாள். எங்கள் ‘வை அணியுங்கள் பெண்கள் உங்களைத் திரும்பிப் பார்ப்பார்கள்.

எங்கள் ‘ர்ட்டை அணியுங்கள் உங்களுக்குள் உள்ள சிங்கம் விழித்துக்கொள்ளும்.

மேற்கண்ட பகுதியில் உள்ள விளம்பரம் பெண்களைப் போகப்பொருளாகவும் போதையூட்டும் பொருளாகவும் பார்க்கப்படுகிற நிலையைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**முடிவுரை**

அம்பை சிறுகதைகளில் மதிக்கப்படவேண்டிய பெண்கள் ஏதோ ஒருசில காரணங்களினாலும் சில சந்தர்ப்ப சூழலினாலும் மேலேகண்ட இன்னல்கள் அடைகின்றனர். பெண்ணின் இன்றைய உண்மைநிலையை நாம் சிந்தித்து பார்க்கவேண்டும் பெண்கள் ஆண்களுக்குரிய சுதந்திரத்தோடு சமூதாயத்தில் வாழமுடிகிறா? என்ற கேள்வியோடு முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தி. முருகரத்தினம் (ப.ஆ),தமிழியல் பெண்ணியம், ப.146.
2. ந.சி. கந்தையாபிள்ளை, பெண்கள் உலகம், ப.41.
3. சரளாராசகோபலன், தமிழ்த் தென்றலும் பெண்மையும், பக்.179-180.
4. தி. முருகரத்தினம் (ப.ஆ),மு.கு.நூ, ப. 146.
5. தி. முருகரத்தினம் (ப.ஆ), மு.கு.நூ, ப. 112.
6. இரா. பிரேமா, பெண்ணியம் அணுகுமுறைகள், ப.115-116.
7. ச.வே.சுப்பிரமணியம், தொல்காப்பிய தெளிவுரை,பொருள்-களவியல்,7.
8. ச.வே.சுப்பிரமணியம், மு.கு. நூ, களவியல்.8.
9. இரா. பிரேமா, மு. கு. நூ, ப.117.
10. ந.சி. கந்தையாபிள்ளை, மு.கு.நூ, ப.70.
11. செம்மலர், ஆகஸ்டு-2000,ப.13.

*******